# முதியவர்களின் பணக் குறை, மனக் கவலையைப் போக்கும் தமிழக அரசு

**மாதம் ரூ. 1000 ஓய்வூதியம் வழங்கி**

## விழுப்புரம் மாவட்ட பயனாளிகள் நெஞ்சார்ந்த நன்றி



மாதம் ரூ. 1000 ஓய்வூதியம் வழங்கி முதியவர்களின் பண தேவையையும், மனக் குறையையும் போக்கும் மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா வழியில், முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி தலைமையில் செயல்படும் தமிழக அரசுக்கு விழுப்புரம் மாவட்ட பயனாளிகள் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போடச் செய்ய வேண்டும் என்பதும், இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்பதும் தான் மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் குறிக்கோளாகும். அவரது வழியில் முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி தலைமையில் செயல்படும் தமிழக அரசு ஆதரவற்ற முதியோர்கள், ஆதரவற்ற விதவையர், கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள், மாற்றுத்திறனாளிகள், ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளிகள், 50 வயது எய்தியும் வசதி வாய்ப்பின்றி திருமணமாகாத உழைக்கும் திறனற்ற ஏழைப் பெண்கள் ஆகியோருக்குச் சமூகப் பாதுகாப்பு அளிக்கப்பட்டு அவர்களும் தங்கள் வாழ்வில் வளம் காண மாதாந்திர ஓய்வூதியத்தொகை ரூ.1,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

### கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு உதவித்தொகை

விழுப்புரம் மாவட்டத்தில் 13 வட்டங்களில் உள்ள முதியோர்களுக்கு சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. சின்னசேலம் வட்டத்தில் 12,722 முதியோர்களுக்கும், செஞ்சி வட்டத்தில் 21,362 முதியோர்களுக்கும், கள்ளக்குறிச்சி வட்டத்தில் 6,951 முதியோர்களுக்கும்,




மரக்காணம் வட்டத்தில் 6,341 முதியோர்களுக்கும், சங்கராபுரம் வட்டத்தில்12,051 முதியோர்களுக்கும், திண்டிவனம் வட்டத்தில் 22,469 முதியோர்களுக்கும்,

திருக்கோவிலூர் வட்டத்தில் 11,235 முதியோர்களுக்கும், உளுந்தூர்பேட்டை வட்டத்தில் 10,324 முதியோர்களுக்கும், வானூர் வட்டத்தில் 5,900 முதியோர்களுக்கும், விக்கிரவாண்டி வட்டத்தில் 15,859 முதியோர்களுக்கும், விழுப்புரம் வட்டத்தில் 38,404 முதியோர்களுக்கும், மரக்காணம் வட்டத்தில் 6,341 முதியோர்களுக்கும், கண்டாச்சிபுரம் வட்டத்தில் 7,428 முதியோர்களுக்கும், மேல்மலையனூர் வட்டத்தில் 9,996 முதியோர்களுக்கும் ஆக மொத்தம் 13 வட்டங்களிலுள்ள 1,81,042 முதியோர்களுக்கு தலா ரூ.1,000 வீதம் ஒவ்வொரு மாதத்திற்கும் விழுப்புரம் மாவட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு முதியோர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இந்திராகாந்தி தேசிய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் 67,973 நபர்களுக்கும், இந்திராகாந்தி தேசிய மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை திட்டத்தின்கீழ் 5,330 நபர்களுக்கும், இந்திராகாந்தி தேசிய விதவை உதவித்தொகை திட்டத்தின்கீழ் 19,157 நபர்களுக்கும், மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை திட்டத்தின்கீழ் 17,222 நபர்களுக்கும், ஆதரவற்ற விதவை உதவித்தொகை திட்டத்தின்கீழ் 31,469 நபர்களுக்கும்,

ஆதரவற்ற கணவனால் கைவிட ப்பட்ட பெண்கள் உதவித்தொகை திட்டத்தின்கீழ் 2,842 நபர்களுக்கும், ஆதரவற்ற திருமணம் ஆகாதவர் உதவித்தொகை திட்டத்தின்கீழ் 441 நபர்களுக்கும், முதலமைச்சர் உழவர் பாதுகாப்பு உதவித்தொகை திட்டத்தின்கீழ் 36,503 நபர்களுக்கும், இலங்கை அகதிகள் முதியோர் உதவித்தொகை திட்டத்தின்கீழ் 39 நபர்களுக்கும், இலங்கை அகதிகள் மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை திட்டத்தின்கீழ் 12 நபர்களுக்கும், இலங்கை அகதிகள் ஆதரவற்ற விதவை உதவித்தொகை திட்டத்தின்கீழ் 54 நபர்களுக்கும் என மொத்தம் 1,81,042 நபர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தின் மூலம் பயனடைந்த விழுப்புரம் மாவட்ட பயனாளிகள் மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா வழியில் முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி தலைமையில் செயல்படும் தமிழக அரசுக்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

### நான் சாப்பிட நினைத்ததை மனதார வாங்கி சாப்பிடுகிறேன்



விக்கிரவாண்டி வட்டம் அன்னியூர் கிராமத்தைச் சேர்ந்த ஞானவள்ளி தெரிவித்ததாவது:

எனது கணவர் இறந்து 16 வருடங்கள் ஆகின்றன. எனக்கு மகளுக்கு திருமணமாகி 10 ஆண்டுகள் ஆகிறது. அவரது கணவர் வீட்டில் வசித்து வருகிறேன். எனக்கு 15.10.1998 முதல் விதவை உதவித்தொகையாக பெற்று வருகிறேன். தற்போது ரூ.1,000 பெற்று வருகிறேன். இதனால் தற்போது மன உறுதியுடன் இருக்கிறேன். நான் சாப்பிட நினைத்ததை மனதார வாங்கி சாப்பிடுகிறேன். இந்த ரூ.1,000 உதவித்தொகை போதுமானதாக உள்ளது. உதவிப் பணம் என் சிரமத்தை போக்கியுள்ளது. என் சிரமத்தை தீர்த்த மகராசி மறைந்த முன்னாள் முதலமைச்சர் அம்மாவுக்கும், அவரது வழியில் முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி தலைமையில் செயல்படும் தமிழக அரசுக்கு காலமெல்லாம் நன்றி சொல்வேன் என்றும், நன்றிக்கடன் பட்டவளாக இருப்பேன் என்று தெரிவித்தார்.

### பணம் தேவை என்று யாரிடமும் கையேந்த தேவையில்லை



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி வட்டம் என்னாயிரம் கிராமத்தைச் சேர்ந்த அங்கம்மாள் தெரிவித்ததாவது :

என் கணவர் கோதண்டபானி 8 வருடத்திற்கு முன் காலமாகி விட்டார். எனக்கு பிள்ளைகளே கிடையாது. வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறேன். நான் 24.6.2009 முதல் இந்திராகாந்தி தேசிய முதியோர் உதவித்தொகை பெற்று வருகிறேன். மறைந்த முன்னாள் தமிழக முதலமைச்சர் அம்மா முதியோர் உதவித் தொகையினை ரூ.1,000 மாக உயர்த்தி வழங்கியது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. இந்த சூழ்நிலையில் என் ஒருத்திக்கு போதுமானதாக உள்ளது. இந்த உதவித்தொகையுடன் இலவச அரிசியும் கொடுப்பதால் வயிறாற சாப்பிட முடிகிறது. பணம் தேவை என்று யாரிடமும் கையேந்த தேவையில்லை. என்னை சொந்த காலில் நிற்க வைத்த அந்த புண்ணியவதி மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கும், அவரது வழியில் முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி தலைமையில் செயல்படும் தமிழக அரசுக்கு என்றென்றும் நன்றிகடன் பட்டவளாக இருப்பேன் என்று மனதார நன்றி கூறினார்.



அம்பத்தூர் தொலைபேசி நிலையம், அடுக்குமாடி வீடுகள் அருகே வி.ஜி.என். பிரெண்ட் பார்க் வீட்டு மனை திட்டம் 541 சதுர அடி முதல் 2500 சதுர அடி வரை உள்ளது.

**★ பூங்கா, கூட்டம் நடத்த, படம் திரையிட அரங்கம்**

**★ கடனுக்கு வங்கிகள் அங்கீகரித்த திட்டம் ★ சி.எம்.டி.ஏ. அங்கீகாரம்**

# அண்ணாநகரிலிருந்து 5 கி.மீ. தூரத்தில் வி.ஜி.என். பிரெண்ட் பார்க் மனைகள்

## பாதுகாப்பான சுவர், தார்சாலை, எல்.இ.டி. தெருவிளக்குடன் உடனடி வீடு கட்டி குடியேறலாம்

சென்னை, செப். 28–

கட்டுமான துறையில் முன்னணி நிறுவனமான 30 ஆண்டு பாரம்பரியமிக்கதுமான வி.ஜி.என். புராபர்டி டெவலப்பர்ஸ் நிறுவனம் வி.ஜி.என். பிரெண்ட் பார்க் என்னும் வீட்டு மனை திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. இத்திட்டம் அம்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து 1 கி.மீ. தூரத்திலும், அண்ணா நகரிலிருந்து 5 கி.மீ. தூரத்திலும் உள்ளன. சி.எம்.டி.ஏ. அங்கீகாரம், சுற்றுப்புற பாதுகாப்பு சுவர், தார் ரோடு, தெரு விளக்குகள் உள்ளதால் உடனடியாக மனைகளில் வீடு கட்டி பால் காய்ச்சி குடியேறலாம்.

இது அறிமுகம் செய்யப்பட்டு ஒரே வாரத்தில் 75% வீட்டு மனைகள் விற்று தீர்ந்தது. மீதமுள்ள பிளாட்டுக்கள் ரூ.36 லட்சம் முதல் விற்பனை செய்யப்படுகிறது. இதில் பிளாட்டுகள் 646 சதுர அடி முதல் 2500 சதுர அடி வரை விஸ்தீரனத்தில் கிடைக்கும். நமது விருப்பப்படி வடிவமைத்து கனவு இல்லத்தை உடன் கட்டலாம் என்று இந்நிறுவனத்தின் சேர்மன் வி.என். தேவதாஸ் மற்றும் நிர்வாக இயக்குனர் ஏ.பிரதீஷ் தேவதாஸ் ஆகியோர் தெரிவித்தனர்.

வி.ஜி.என். பிரெண்ட் பார்க் சுற்றி பாதுகாப்பு சுவர் நிறுவப்பட்டு பாதுகாப்பாக உள்ளது.

சி.எம்.டி.ஏ. அங்கீகாரம் உள்ளதால் உடன் வீடு கட்டலாம். ஆர்கிடெட் வடிவமைத்த பூங்கா உள்ளது. பசுமை மரங்கள் நடப்பட்டுள்ளது. நிலத்தடி நீர் சிறப்பாக உள்ளது.

வங்கிகள் உடனடி கடன்

இந்த திட்டத்தை வங்கிகள் நேரடியாக ஆய்வு செய்து கடன் வழங்க அங்கீகாரம் அளித்துள்ளன. மொத்த மதிப்பில் 80% அளவுக்கு கடன் கிடைக்கும். ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி, எச்.டி.எப். சி, ஆக்சிஸ் வங்கி, டி.எச். எப்.எல்., இந்தியன் வங்கி, இந்தியா புல்ஸ் ஆகிய நிதி நிறுவனங்கள் கடன் வழங்க உறுதி அளித்துள்ளன. இத்திட்டத்தின் மீது நம்பிக்கை வைத்து சாண்டர் பைனான்ஸ் முதலீடு செய்துள்ளது. இது பற்றி அறிய www. vgn.in வலைதளம் அல்லது 044 43439999 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

வி.ஜி.என். பிரெண்ட் பார்க் சென்னை மாநகராட்சி எல்லைக்குள் உள்ளது. அண்ணா நகரிலிருந்து 5 கி.மீ. தூரமும், அம்பத்தூர் தொலைபேசியகம் அருகே, பஸ் நிலையத்திலிருந்து 1 கி.மீ. தூரத்திலும், டி.ஐ. சைக்கிள் பள்ளியிலிருந்து 1 கி.மீ. தூரத்திலும், தொழிற்பேட்டையிலிருந்து 2 கி.மீ. தூரத்திலும் இந்த மனை உள்ளது. பாடி பாலத்திலிருந்து 4 கி.மீ. தூரத்திலும், ஸ்டான் போர்டு மருத்துவமனையிலிருந்து 4 கி.மீ. தூரத்திலும் இது உள்ளது.

சென்னை நகரில் வீட்டுமனைகளின் மதிப்பு வேகமாக அதிகரித்து வருகிறது. பல்வேறு சாப்ட்வேர், வாகன தொழிற்சாலை நிறுவனங்கள், சென்னையில் நிறுவப்பட்டு வருவதால், இந்த வி.ஜி.என். பிரெண்ட் பார்க் சிறந்த முதலீடாக இருக்கும் என்று நிர்வாக இயக்குனர் ஏ.பிரதீஷ் தேவதாஸ் தெரிவித்தார்.






சேர்மன்
வி.என். தேவதாஸ்



நிர்வாக இயக்குனர்
ஏ.பிரதீஷ் தேவதாஸ்

# சிறந்த செயல்பாடு, அதிக மைலேஜ், சக்திவாய்ந்த என்ஜின் கொண்ட டி.வி.எஸ். ஜூபிடர் ஸ்கூட்டர்; 4 ஆண்டுகளில் 20 லட்சம் விற்று சாதனை

## தலைமை செயல் அதிகாரி கே.எஸ்.ராதாகிருஷ்ணன் பெருமிதம்

சென்னை, செப். 27–

இந்தியாவின் இரண்டுசக்கர மற்றும் மூன்று சக்கர வாகனங்கள் உற்பத்தியில் முன்னணி நிறுவனமான டிவிஎஸ் மோட்டார் கம்பெனியின் பிரபல ஸ்கூட்டரான டிவிஎஸ் ஜுபிடர் அதன் விற்பனை தொடங்கிய 4 ஆண்டுகளுக்குள் 20 லட்சம் விற்பனை சாதனை புரிந்துள்ளதாக இதன் தலைமை செயல் அதிகாரி கே.என். ராதாகிருஷ்ணன் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

2013ல் அறிமுகப்படுத்தப்பட்ட டிவிஎஸ் ஜுபிடர் அதிகத்தின் பயன் என்ற பிராண்டின் உறுதிமொழிக்கேற்ப கடந்த 4 ஆண்டுகளில் பல விருதுகளை வென்று உண்மையை நிலைநாட்டியுள்ளது. 2016 முற்பகுதியில், 1 மில்லியன் விற்பனைக்குறியை அடைந்த மிகவும் வேகமான ஸ்கூட்டர் டிவிஎஸ் ஜுபிடர் ஆகும். அதுவும் வெறும் 30 மாதங்களில் அடைந்திருக்கிறது என்றார்..

டிவிஎஸ் மோட்டார் நிறுவனத்தின் துணை தலைவர் (சந்தையாக்கல்), அனிருதா ஹல்தார் இந்த சாதனை குறித்து கருத்து தெரிவிக்கையில், டிவிஎஸ் ஜுபிடர் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து மைல்களுக்கு மேல் மைல்கள் கடந்து சாதனை புரிந்து வருவதை பார்க்கும்போது எங்களுக்கு அளவற்ற மகிழ்ச்சி தருகிறது. 4 ஆண்டு குறுகிய காலத்தில் இந்த மைல்கல்லை அடைந்த முதல் ஸ்கூட்டர் என்ற பெருமை டிவிஎஸ் ஜுப்பிட்டருக்கு உள்ளது. டிவிஎஸ் ஜுபிடர் குடும்பத்தில் 20 லட்சம் மகிழ்ச்சியான வாடிக்கையாளர்கள் இப்போது எங்களுக்கு உள்ளதால் இந்த மைல்கல் எங்களுக்கு விசேஷமானதாகும். இதுபோன்ற தருணங்கள் தான் அர்ப்பணிக்கப்பட்ட வாடிக்கையாளர் திருப்தி முனைப்புகளைக் கொண்டு உயர்ந்த புராடக்ட்களை தொடர்ந்து வழங்குவதற்கு எங்களுக்கு உத்வேகமளிக்கிறது," என்று கூறினார்.



டிவிஎஸ் ஜுபிடர், குறிப்பிடத்தக்க ஆற்றல் விசை, உயர்ந்த முடுக்கம் மற்றும் தரத்தில் சிறந்த எரிபொருள் திறன் ஆகியவற்றை ஒருங்கே தரக்கூடிய ஒரு அடுத்த தலைமுறை, அனைத்தும் அலுமினியம், குறைந்த உராய்வுடைய 110சிசி என்ஜின் இயங்கப்பெற்றதாகும். உலோக பாடி கொண்ட டிவிஎஸ் ஜுபிடர், உயர் செயல்திறனுடைய தரமான சவாரியை, உயர்தரமான சவாரி சவுகர்யத்துடன் கொடுத்து உற்ற உணர்வுபுர்வமான தோழனாக்குகிறது.

‘இக்கோமோடு மற்றும் பவர்மோடு’ ஆகிய இரண்டு மோட்களிலும் ஓட்டுபவர்களுக்கு வழிகாட்டக்கூடிய டிவிஎஸ் காப்புரிமை பெற்ற எக்னோமீட்டருடன் இந்த ஸ்கூட்டர் வெளிவந்துள்ளது மற்றும் இதன் என்ஜின் ‘இக்கோ மோட்’ல் தரத்தில் சிறந்த எரிபொருள் சிக்கனத்தை கொடுக்கிறது.

டிவிஎஸ் ஜுபிடர் பேஸ் வேரியன்டிலும் அத்துடன் ZX–லும் மற்றும் டிஸ்க் பிரேக்குடன்கூடிய ZX–வேரியன்ட்களிலும் கிடைக்கிறது. இந்த பிராண்டு அண்மையில் அனைத்தும் புதிய ஒளிரும் தந்த பாடி கலர், அழகிய முழு குரோம் கண்ணாடிகள், ஸ்டைலான விண்ட்ஷீல்டு (காற்றுத்தடுப்பு), தரம் வாய்ந்த பின் அமர்ந்து வருபவர்களுக்கு குஷன் கொண்ட பின்தாங்கி போன்ற பலவகையிலான புதிய அம்சங்களுடனும் மற்றும் ஸ்மார்ட் ருளுட சார்ஜர் மற்றும் சவுகர்யமிக்க ட்யுவல் டோன் இருக்கையுடனும் கிளாசிக் பதிப்பை அறிமுகப்படுத்தியது.

டிவிஎஸ் ஜுபிடரில், பாதுகாப்பான மற்றும் தங்குதடையற்ற ஓட்டும் அனுபவத்தை உறுதிசெய்யக்கூடிய சிங்க் பிரேக்கிங் சிஸ்டம் உள்ளது. ராயல் ஒயின், மாட் ப்ளு, ஸ்டாலியன் பிரவுன், டைட்டானியம் கிரே, மிட்நைட் பிளாக், வால்கனோ ரெட், பிரிஸ்டைன் ஒயிட், ஜேட் கிரீன் மற்றும் மிஸ்டிக் கோல்டு ஆகிய வண்ணத்தேர்வுகளில் ஜுபிடர் கிடைக்கிறது.



டி.வி.எஸ். ஜூபிடர் ஸ்கூட்டர் 20 லட்சம் விற்பனை செய்து சாதனை படைத்துள்ளது.